உடனடி வெளியீட்டுக்காக

# ப்ராம்ப்ட்டன் நகரம் தனது புதுப்பிக்கப்பட்ட நகரடேஷ்போர்டினை (CityDashboard) துவக்குகிறது

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 25, 2021) – ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பொதுமக்களுக்கான தனது டேஷ்போர்டினை (டேஷ்போர்டு- ஒரு வாகனத்தின் 'ஓட்டுனர் இருக்கைக்கு' எதிரில் இருக்கும் அளவு காட்டும் கருவிகள், இயக்குவதற்கான பொத்தான்கள் கொண்ட அமைப்புக்கு இந்தப் பெயர்) புதுப்பித்து துவக்குகிறது: CityDashboard. விருது வென்ற திறந்தநிலை தரவுத்தளமாகிய ஜியோஹப் (GeoHUB) இல் அமைக்கப்பட்ட நகரடேஷ்போர்டு (CityDashboard) என்பது, ஒரு ஆன்லைன் கருவியாகும்; இது சமுதாயத்திற்கு வேண்டிய விளைபலன்களை அடைய, நகரின் தினசரி இயக்கங்கள் எப்படி பங்களிக்கின்றன என சமுதாயத்தினர் பார்த்து அறிந்துகொள்ள உதவுகிறது.

அசலில் இது 2018 இல் துவக்கப்பட்ட நகரடேஷ்போர்டு என்பது ஆறு முக்கிய பகுதிகள் பற்றிய கண்ணோட்டத்தினை வழங்குகிறது:

- நகரின் நிதிகள்
- நகரம் வழங்கும் சேவைகள்
- வாழக்கூடியதன்மை
- சமுதாய நல வாழ்வு
- பொருளாதாரம்
- நகர்ப்புற உருவமைப்பு மற்றும் சுற்றுச்சூழல்

இந்தப் புதுப்பிக்கப்பட்ட நகரடேஷ்போர்டு (CityDashboard), நகரவாசிகளுக்கு நகரநிர்வாகத்தின் சேவைகள், நிதிரீதியான நடவடிக்கைகள் மற்றும் சமுதாய நிகழ்வுகளுக்கான குறிகாட்டிகள் பற்றிய சிறு சிறு படப்பிடிப்பு போல காட்சி கொடுக்கிறது. தற்போதைய நிலை மற்றும் கட்டவரைபடம் (graph) ஆகியவற்றுடன் ஒவ்வொரு அளவுகோலும் எதன் பொருட்டானது என்பது பற்றிய கதையைச் சொல்வதுடன், அது எப்படி அளவிடப்படுகிறது மற்றும் நகரம் அடைந்துவரும் வளர்ச்சி பற்றியும் பேசுகிறது. இந்த அளவெடுப்புக்கள் தினசரி சேவைகள், ஆய்வுகள், திட்டங்கள், திட்டங்களுக்கான நிகழ்ச்சி நிரல்கள், நில வரைபடங்கள், ஆகியவற்றின்மீது செல்வாக்கு செலுத்த நகரம் என்ன செய்து வருகிறது என்பது சம்பந்தப்பட்ட லின்குகள், அதிக கருப்பொருட்களை வழங்குகின்றன.

திறந்த மனப்பான்மை, வெளிப்படையானதன்மை மற்றும் தரவுகளால் உந்தப்பட்ட முடிவு மேற்கொள்ளுதல் ஆகியவற்றுக்கு கடப்பாடு கொண்டு ப்ராம்ப்ட்டன் நகரம் நன்கு இயக்கப்பட்டு வருகிறது. புதுமை படைத்தல், தொடர்ச்சியான வளர்ச்சிக்கு செல்வாக்கு செலுத்துதல் மற்றும் பாதுகாப்பானதும், நிலைத்துநிற்கும் தன்மை கொண்ட வெற்றிகரமான அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தைக் கட்டமைக்க, நகராட்சியின் சேவைகளை செயல்படுத்தும் தன்மை மற்றும் சமுதாய குறிகாட்டிகள் ஆகியவை உதவும்.

புதுப்பிக்கப்பட்ட நகரடேஷ்போர்டு (CityDashboard) ஐ இந்த வலைப்பக்கத்தில் காணலாம்: www.brampton.ca/dashboard. டேஷ்போர்டில் அமைந்துள்ள "டேஷ்போர்டு பின்னூட்டக்கருத்து" பொத்தானை அழுத்தி நகரவாசிகள் தங்கள் கருத்துக்களை வழங்க உற்சாகம் அளிக்கப்படுகிறார்கள்.

**விரைவான கூற்றுக்கள்**

- ஜியோஹப் (GeoHub) என்பது அதிகம் அணுகக் கூடிய வகையிலும், பார்வையிடவும், பயனருக்கு தரவுகளைப் பகுப்பாய்வு செய்யும் வகையிலும் எளிதாக்கி புதுப்பிக்கப்பட்டிருக்கிறது; இது பெர்ஸனாஸ் (Personas) மற்றும் திறந்தநிலை தரவு தொகுப்புக்கள் போன்ற அம்சங்களுடன் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. பெர்ஸனாஸ் (Personas) என்பது, குறிப்பிட்ட குழுக்களின் தேவைக்கு பொருந்தும் வகையில் தரவுகளின் ஒரு திரட்டல் மற்றும் காட்சிகொடுக்கும் தன்மையை வழங்குகிறது.
- தரவுகளைத் தேடிக் கண்டறிவதற்காக ஜியோஹப் (GeoHub) தன்வசம் 300க்கும் மேற்பட்ட தரவு தொகுப்புக்களைக் கொண்டிருக்கிறது. நகரில் இருக்கும் பயனர்கள் தரவுகளைப் பார்வையிட்டு, தங்கள் அனுபவத்தை இங்கு பகிரலாம்: open@brampton.ca.
- செப்டம்பர் மாதத்தில், நகரத்தரவுகள் பற்றிய உலக கவுன்சில் அமைப்பு(WCCD) லிருந்து அடுத்தடுத்து இரண்டாவது ஆண்டாக ISO 37120 பிளாட்டினம் நிலை சான்றளிப்பினை நகர நிர்வாகம் பெற்றது. WCCD யின் ISO 37120 தரநிலைக்குள்ளாக இருக்கும் 104 குறிகாட்டிகளில் 90 க்கும் மேற்பட்டவற்றை தெரியப்படுத்தி, கனடா அரசு ஆதரவளிக்கின்ற, கனடிய நகரங்களுக்கான திட்டப்பணியின் தரவுகள் (Data for Canadian Cities Project (DCCP)) யின் அங்கமாக ப்ராம்ப்ட்டன் நகரம் இருக்கின்றது; இதன்படி இந்த நகரம் உலகளாவ 35 நாடுகளில் இருக்கின்ற 100க்கும் மேற்பட்ட நகரங்களின் குழுவில் இணைந்துள்ளது - இதில் 30 நகரங்கள் கனடாவில் உள்ளன – இவர்கள் விளைபலன்மிக்க உருமாற்றம் தரக்கூடிய முடிவுகளை மேற்கொள்ள நகரின் தரவுகளைச் சேகரித்து, பகிர்ந்து உபயோகித்துக் கொள்கின்றனர்.

**அறிஞர் கூற்றுக்கள்**

"ப்ராம்ப்ட்டன் நன்கு இயங்கும் நகரமாகும்; புதுமைபடைத்தல் மற்றும் தரவுகளால் உந்தப்படும் முடிவெடுப்பதில் உலகளாவிய முன்னணியாளராக நாங்கள் தொடர்ந்து நிலைநிறுத்தப்படுகிறோம். புதுப்பிக்கப்பட்ட சிட்டி டாஷ்போர்டு ஆனது, திறந்த மனதுடைய தன்மை மற்றும் வெளிப்படையான தன்மைக்கான எங்கள் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துகிறது, மற்றும் எங்கள் குடியிருப்பாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த, கவுன்சில் கால முன்னுரிமைகொண்ட விஷயங்களை எவ்வாறு முன்னோக்கி நகர்த்துகிறோம் என்பதையும் காட்டுகிறது. பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான நகரத்தைக் கட்டியெழுப்புவதில் தொடர்ச்சியான முன்னேற்றம் அவசியம்; எங்கள் சமூகத்திற்கான சிறந்த சான்று அடிப்படையிலான முடிவுகளைத் தொடர்ந்து எடுக்க இந்த சிட்டிடேஷ்போர்டு (CityDashboard) எங்களுக்கு உதவும்.

*- பேட்ரிக் பிரவுன், மேயர், பிராம்ப்டன் நகரம்*

"ப்ராம்ப்ட்டன் நகரில், எங்கள் குடியிருப்பாளர்களுக்கு விளைபலன்களை சேர்ப்பிக்கவும் அவர்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரத்தை வழங்கவுதற்கும் என்றே, பகிரப்பட்ட அர்ப்பணிப்புடன் எங்களது தினசரி செயல்பாடுகள் இயக்கப்படுகின்றன. புதுப்பிக்கப்பட்ட, பயனருக்கு எளிதான, சிட்டி டாஷ்போர்டு மூலம் எங்கள் செயல்திறனைக் கண்காணிப்பதன் மூலம், தொடர்ந்து புதுமைகளை எங்களால் உருவாக்க முடியும்; தொடர்ச்சியான முன்னேற்றத்தில் செல்வாக்கு செலுத்தலாம் மற்றும் பாதுகாப்பான, நிலையான மற்றும் வெற்றிகரமான, அனைவரையும் உள்ளடக்கிய சமூகத்தை உருவாக்கலாம். அதே சமயத்தில் சமூகத்தினருடன் எங்கள் சேவைகள் மற்றும் அதன் விளைபலன்களை திறந்த மனதுடனும் வெளிப்படையான தன்மையுடனும் பகிரலாம் "

*- டேவிட் பாரிக், தலைமை நிர்வாக அதிகாரி, பிராம்ப்டன் நகரம்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 700,000 மக்களையும் 75,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். *Twitter*, *Facebook*, மற்றும் *Instagram* ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். *www.brampton.ca* இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca